**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Crlmp.No.6429/2024
Complaint side witness.2

| | |
|---|---|
| பெயர் : பழனிஸ்வரி | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24th day of January 2025.

24.01.2025

**முதல் விசாரணை**

சுமார் 2 மாதங்களுக்கு முன்பாக திருவரங்கம் அரசு மருத்துமனையில் இருந்து எனது வீட்டிற்கு வந்து நீங்கள் கர்ப்பமாக இருக்கிறீர்களா என்று கேட்டார்கள். ஆமாம் என்று நான் கூறினேன். உடனே மருத்துவமனை வர சொன்னார்கள். நான் மருத்துவமனைக்கு வரமாட்டேன் என்று கூறிவிட்டேன். நீங்கள் என்னைக்கு தலைகுளித்திர்கள் என்றும் எனது ஆதார் அட்டையும் கேட்டார்கள். நான் கொடுக்கமாட்டேன் என்று கூறிவிட்டேன். நீங்கள் மருத்துவமனைக்கு வரவில்லை என்றால் என்னால் எப்படி பிறப்பு சான்றிதழ் வாங்க முடியும் என்று கேட்டார்கள். நான் வாங்கி விடுவேன் என்று கூறினேன். எனது கணவர் எங்கே என்று கேட்டார்கள். எனது கணவர் வேலைக்கு சென்றுவிட்டார் என்று கூறிவிட்டேன். எனது கணவருக்கு போன் செய்யசொல்லி கேட்டார்கள். நான் எனது கணவருக்கு போன் செய்து அவர்களிடம் கொடுத்தேன். அவரிடம் எனது கணவர் மருத்துவமனைக்கு வரமாட்டோம் என்று சொன்னோம் அவர்கள் சென்றுவிட்டார்கள்.

பின்பு 10 நாட்கள் கழித்து மருத்துவமனையில் இருந்து தலைமை மருத்துவமனை அழைத்து வந்தார்கள். உனது கணவர் எங்கே என்று கேட்டார்கள். நான் எனது கணவர் வயலுக்கு சென்றுள்ளார்கள் என்று கூறினேன். உனது கணவரிடம் 10 நிமிடம் பேச வேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள். எனது கணவர் வயலில் இருந்து வந்தயுடன் எனது கணவரிடம் எழுத்து மூலமாக

மருத்துவமனைக்கு சிகிச்சை வேண்டாம் என்று கேட்டார்கள். நாங்கள் கையெழுத்து செய்து கொடுத்துவிட்டோம். அவர்கள் சென்றுவிட்டார்கள்.

பின்பு ஒரு மாதம் கழித்து காவல் நிலையத்தில் இருந்து வந்து சம்மன் கொடுத்தார்கள். போலிசார் முத்துமணி எங்கே என்று கேட்டார்கள். நான் வேலைக்கு சென்றுவிட்டார் என்று கூறினேன். உங்கள் கணவர் மீது மருத்துவர் நெப்போலியன் புகார் கொடுத்துள்ளார் என்று கூறினார்கள். அத்துடன் போலிசார் உங்கள் கணவருக்கு போன் செய்து கொடுங்கள் என்று என்னிடம் சொன்னார்கள். போன் செய்து கொடுத்தவுடன் போலிசார் எனது கணவரிடம் எங்கே இருக்கிறீர்கள் என்று கேட்டார்கள். எனது கணவர் வேலையாக இருக்கிறேன் என்று கூறினார்கள் போலிசார் உங்களுக்கு சம்மன் கொடுத்துள்ளேன் என்று எனது கணவரிடம் கூறினார்கள். எனது கணவர் இப்போது வரமுடியாது இரவுதான் வருவேன் என்றும் சம்மனை கொடுத்துவிட்டு போங்கள் என்று கூறினார் நான் சம்மனை சம்மதம் இல்லாமல் வாங்கிகொண்டேன்.

பின்பு அவர்கள் சென்றுவிட்டார். 14.01.2025 பொங்கள் அன்று காவல் ஆய்வாளர் வந்து முத்துமணி எங்கே என்று கேட்டார். அவர்கள் வேலைக்கு சென்றுவிட்டார்கள என்று கூறினேன். அவரை முன்ஜாமின் எடுக்க சொல்லுங்கள் இல்லை என்றால் சிறையில் வைத்து விடுவோம் என்று கூறினார்கள். பின்பு டாக்டர் நெப்போலியனிடம் சமாதனமாக போக சொன்னார்கள். நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளோம் நாங்கள் அங்கு பார்த்து கொள்கிறோம் என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார்கள்.

**DEPOSITION OF WITNESS**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR</u>**

Crlmp.No.6429/2024
Complaint side witness.1

| | |
|---|---|
| பெயர் : மீனாள் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24th day of January 2025.

24.01.2025

**முதல் விசாரணை**

சுமார் 2 மாதங்களுக்கு முன்பாக தேதி, மாதம் நினைவில் இல்லை. மாலை 05.00 மணியளவில் வீட்டிற்கு அருகில் உள்ள தெரு தண்ணீர் குழாயில் தண்ணீர் பிடித்துக்கொண்டிருந்த போது இரண்டு போலிசார் வந்து முத்துமணியின் அம்மா யார் என்று கேட்டார்கள். நான்தான் என்று அவர்களிடம் கூறினேன். உனது மகன் எங்கே என்று கேட்டார்கள். எனது பேத்தி சேலம் ஆஸ்டலில் இருப்பதாக சொன்னேன். உனது மகன் இப்படி ஒழிந்துகொண்டு இருக்கிறான். எங்னைக்காவது உனது மகனை பிடித்தால் முட்டிக்கு முட்டி தட்டிவிடுவோம் என்று போலிசார் சொன்னார்கள். உனது மகன் வரவில்லை என்றால் நீதான் ஸ்டேசனுக்கு வரவேண்டும் என்று சொன்னார்கள். என்னை நிக்கவைத்து செல்போனில் படம் எடுத்து சென்றுவிட்டார்கள்.